**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தானம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததென்றும், எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (இ.க.நி.)

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு | விபரம் |
| --- | --- | --- |
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 03 | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொறுப்புக்களுக்கான கூற்றைக் குறிப்பிட்டு கணக்கை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் கணக்குகளில் இது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 | ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்காக பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 18 | காணிகளின் பெறுமதி ரூபா 4,452,241,129 ஆக மீள் பெறுமதியிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக கணக்குகளில் வெளிக்காட்டப்பட வேண்டிய விடயங்கள் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 | (i) நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 5,870,075 கூட்டுத்தொகையான ஏனைய தரப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட மானியம், பெறப்பட்ட சொத்துக்களாகவோ அல்லது நிர்மாணிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளாகவே இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) அரசாங்க உதவுதொகைகள் மற்றும் அரசாங்க மானியங்கள் கணக்கிடப்படுகையில் பிரயோகிக்கப் பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு முறைமை உள்ளடங்கலாக ஏனைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) மூலதன மானியங்களினால் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு வீதத்திற்கு சமனான தொகை வருடாந்த வருமானமாக இனங்கண்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 257,602,107 தொகையான மூலதன மானியத்திற்கான காலக்கழிவாக ரூபா 2,462,643 மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### 1.2.2.1 கணக்குகளில் குறைத்துக்காட்டல்கள்

(i) மூலதன மானியமாகப் பெறப்பட்டிருந்த ரூபா 38,100,000 தொகையில் ரூபா 7,987,334 தொகை மீண்டெழும் மானியமாகக் கருதப்பட்டு குறித்த பணிக்கான பெறுவனவாகக் கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான வருமானம் அத்தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், வருமானமாக அல்லது மூலதனச் செலவினமாக தெளிவாக இனங்காண்பதற்கு உரித்தான கணக்குக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொண்டாச்சி தோட்டத்தின் சொத்துக்களாக (காணி தவிர) ரூபா 46,515,043 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்களில் பல பௌதீக ரீதியாக இல்லாத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி சரியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.2.3.1 பெறவேண்டிய கணக்குகள்

ரூபா 2,022,372 தொகையான வெளிவாரிக் கடன்பட்டோருக்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கமந்தளுவத்தை தோட்டம் மற்றும் விரிவாக்கல் பிரிவில் உள்ள ரூபா 12,829 கூட்டுத்தொகையான 6 ஆண்டுகள் கடந்திருந்த கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்காக சான்றுகள் இல்லாமை

மீளாய்வாண்டின் போது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி முறையே ரூபா 11,054,122 ஆகவும் ரூபா 9,364,490 ஆகவும் காணப்பட்டது. இதற்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிராததுடன் உரிய பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. கடன்கொடுத்தோர்களுக்கான காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை அரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி.பி 757(2) | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1646 | 21 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சுற்றறிக்கை | |
| (i) 1973 மே 25 ஆம் திகதிய மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன ஸ்தாபிப்பு அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை | உப தலைவர் பதவிக்கான ஏற்பாடு இல்லாதிருக்கையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் உப தலைவரை நியமித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 255,999 தொகை சம்பளங்கள் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக உப தலைவருக்காக சாரதியுடன் ஒரு வாகனம் ஒதுக்கப்பட்டு எரிபொருட் படிப்பணம் செலுத்தப்பட்டு தொலைபேசிப் பட்டியல் தீர்ப்பனவும் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 2003 யூன் மாதம் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.4 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நிறுவகத் தலைவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 11,694 வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 81,859 தொகை தொலைபேசிக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 2005 சனவரி 31 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வாகனங்கள் வாடகைக்குப் பெறப்படுகையில் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஓர் உடன்படிக்கை இருக்கவில்லை. |
| (iv) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு சுற்றறிக்கை 3.2 ஆம் பிரிவு | மிர்ஜ்ஜவில மரமுந்திரிகை விற்பனைப் பிரிவின் நிர்மாணிப்புகளுக்காக ரூபா 909,015 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதற்கான கூறு விலைகள் கோரப்பட்டிருக்க வில்லை. |
| (v) | 2008 நவம்பர் 19 ஆந் திகதிய பீஈ/சீஓ/எம்சீ/27/2 அலகு ஆம் iii இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதம் | கூட்டுத்தான பதவியணியினருக்கு போக்குவரத்துப் படிகள் செலுத்த முடியாதென இக்கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 1,500 தொகையும் ரூபா 5,000 வீதமாக போக்குவரத்துப் படிப்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (vi) | தாபனவிதிக் கொவையின் viii ஆம் அத்தியாயத்தின் 10.2 ஆம் பிரிவு | வார இறுதி நாட்களிலோ அல்லது அரசாங்க விடுமுறை நாட்களிலோ கடமைகளில் ஈடுபட்டு விடுமுறை நாட்களிற்கான சம்பளம் பெறப்படுவதாயின் இதற்காக முன்னங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளில் ரூபா 15,055,181 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனொடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,759,352 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3.295,829 தொகையால அதிகரித்திருந்தது. நாற்று மேடைச் செலவினம் மற்றும் தலைமைக் காரியாலய செலவினம் முறையே ரூபா 3.2 மில்லியனாலும் ரூபா 4.3 மில்லியன் தொகையாலும் அதிகரித்தமையே இதற்குத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மரமுந்திரிகை பயிரின் ஆகக்கூடிய விளைச்சல் ஆயுட் காலம் 30 ஆண்டுகளான போதிலும் எலுவன்குலம வத்தை தவிர்ந்த ஏனைய சகல தோட்டங்களினதும் விளைச்சல் ஆயட் காலம் காலாவதியாகியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்ட மற்றும் அவற்றின் விளைச்சல் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| தோட்டம் | மொத்த விளைச்சல் | ஏக்கர் எண்ணிக்கை | ஏக்கர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் |
|---|---|---|---|
| | (கி.கி) | | (கி.கி) |
| புத்தளம் தோட்டம் | 20,080 | 143 | 140 |
| கமந்தளுவை தோட்டம் | 15,790 | 368 | 42 |
| ஹார்தி தோட்டம் | 3517 | 200 | 17.6 |
| எலுவன்குளம தோட்டம் | 55,000 | 200 | 275 |
| | 94,387 | 911 | 103.6 |

பயிர் செய்கையின் சராசரி விளைச்சல் ஏக்கர் ஒன்றிற்கு கி.கி. 103.6 ஆனதுடன் தனியார் துறையின் விளைச்சல் ஏக்கர் ஒன்றிற்கு கி.கி. 600 ஆகக் காணப்பட்டது. ஏனைய வலய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஏக்கர் ஒன்றிற்கு கி.கி. 2000 அளவில் காணப்பட்டது.

(இ) தோல் உள்ள மரமுந்திரிகைகளில் இருந்து மரமுந்திரிகை தயாரிக்கப்படுகையில் ஏற்படும் நிறைக் குறைவு மற்றும் ஏற்றுமதி அங்கீகரிக்கப்பட்ட மட்டத்தில் நிலவுகின்றதா என்பதனை நிர்ணயிப்பதற்காக அவசியமான நியம விகிதங்களையும் நியமங்களையும் நிர்ணயித்திருக்கவில்லை.

(ஈ) மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவிற்காக கடந்த 6 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | விஸ்தரிப்புச் செலவினம் | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2005 | 5.6 | 23.1 |
| 2006 | 5.1 | 33.1 |
| 2007 | 5.7 | 38.6 |
| 2008 | 5.5 | 50.3 |
| 2009 | 5.1 | 55.6 |
| 2010 | 5.2 | 49.6 |

### 2.2.2 முகாமைத்துவத்திறமையீனங்கள்

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உதவுதொகை கொடுப்பனவு தாமதமாவதனால் மிகை கட்டணமாக ரூபா 28,102 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட இல. டபிள்யூ. பீ. ஜேவை 8403 ஆம் இலக்க வாகனத்தின் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 8.3 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்றுத்தரப் பதவிகளில் 11 வெற்றிடங்கள் நிலவியதுடன் நிறைவேற்றுத் தரமல்லாத தரங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட 10 ஊழியர் எண்ணிக்கைகளில் வெற்றிடம் நிலவியது.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் 37 பதவி வெற்றிடங்கள் இருக்கையில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் 56 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக 49 பேர் சேவையில் ஈடுபடத்தப்பட்டிருந்தனர். 2010 ஆம் ஆண்டிற்காக அவ் ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிப்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,647,440 ஆகக் காணப்பட்டது.

### 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்கு காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) மனித வள முகாமைத்துவம்

(ஈ) விற்பனைக் கூடங்களுக்கு பொருட்கள் விநியோகித்தல்

(உ) பெறுமதிவாய்ந்த மரங்கள் மற்றும் மீள் பயிரிடல் தொடர்பான அறிக்கைகளைப் பேணல்

(ஊ) தவறான கணனி முறைமை